

திருநெல்வேலி கிழக்கு

# கேணியடி ஞானவைரவர் ஆலயம்

## கும்பாபிஷேக மலர் - 2017

## திருநெல்வேலி கிழக்கு

## அருள்மிகு ஸ்ரீ கேணியடி ஞானவைரவர் ஆலயம்

# மகாகும்பாபிஷேக மலர்



**சம்புரோக்ஷண அக்ஷ்டபந்தன பஞ்ச குண்டபக்ஷ உத்தம**

**மகாயாக பிரதிஷ்ட மகாகும்பாபிஷேகம்**

**14.05.2017**

**மண்டலாபிஷேக பூர்த்தி - 1008 சங்காபிஷேகம்**

**28.05.2017**

# உள்ளடக்கம்


நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி 3

சிவஸ்ரீ பொன்.வரதராஜக்குருக்களின் ஆசியுரை 4

பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியரின் ஆசியுரை 5

கேணியடி ஞானவைரவர் அருட்கடாட்ச நிழலினிலே 6

கேணியடி ஞானவைரவர் ஆலய தல வரலாறு 7–9

கேணியடி திருவருள் மிகு ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின்
கும்பாபிஷேக பெருவிழா ஓர் பார்வை 10 – 11

கேணியடி வைரவர் கோயிலும் கூழங்கைத் தம்பிரான் சமாதியும் –
பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா 12 – 15

ஞான ஆட்சி புரியும் ஞானவைரவர் – சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் 16 – 19

எங்கட கேணியடி வைரவர் கோயில் 20

திருநெல்வேலி ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி திருவூஞ்சற் பதிகம் 21 – 24

கேணியடி ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையினரின்
கணக்கறிக்கை (சுருக்கம்) 25 – 27

நன்றியுரை 28



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
19-4-2017

## அருளாசிச் செய்தி

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு, கேணியடியில் உறைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மகாகும்பாபிஷேக மலருக்கு அருளாசி வழங்கும் பேறு கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

எம்பெருமான் ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுக்கு இப்போது நிகழ்கின்ற புனராவர்த்தன சம்புரோக்ஷண அக்ஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ உத்தம மகா யாக பிரதிக்ஷ்டா மகா கும்பாபிஷேகம் அடியவர்களின் பெருமுயற்சியால் திருப்பணிகள் சிறப்புற நிறைவேறி நிகழ்வதும் ஆலயம் அழகாக அமையப் பெற்றிருப்பதும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

நீரின்றி உலகம் இயங்கமாட்டாது. ஆகவே கேணியடியில் அமையப் பெற்ற இந்த ஆலயம்,

**"நீரின்றியமையாது உலகெனின் யார் யார்க்கும்**
**வானின்றமையாதொழுக்கு"**

என்ற திருக்குறளுக்கமைய தண்ணீரின் பெருமையையும் இன்றியமை யாமையையும் எடுத்தியம்பி நிற்கிறது. ஆதலால் பரங்கருணைத் தடங்கடலான ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுடைய கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்துகின்ற சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் மற்றும் அடியார் பெருமக்களுக்கும் எல்லா நலன் களும் கிடைக்க வேண்டுமென்று ஆசிகள் நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்து கின்றோம்.

எல்லாம் வல்ல ஞானவைரவரின் பேரருள் கிருபாகடாட்சம் அடியார்கள், அன்பர்கள், ஆலய நிர்வாகஸ்தர்கள், திருப்பணி செய்தோர் என்று இன்னோரன்ன பலருக்கும் கிட்ட வேண்டுமென்று அருளாசிகள் வழங்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஆதீன குருமுதல்வர்
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

# சிவஸ்ரீ பொன்.வரதராஜக்குருக்களின் ஆசியுரை

திருநெல்வேலி கிழக்கு கேணியடி ஞான வைரவப் பெருமானுக்கு திருப் பணிகள் நிறைவுபெற்று, மகாகும்பாபிஷேகம் குறித்த முகூர்த்தத்தில் 14 ஆம் திகதி வைகாசி மாதம் 2017 அன்று நிகழ்ந்து, எல்லா அடியவர்களுக்கும் வைரவப் பெருமான் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்.

மகாகும்பாபிஷேகத்தின் முக்கிய நோக்கம் கர்ப்பக்கிரங்களில் இருக்கும் மூர்த்திகளின் திருவருட்சக்தியை சான்னித்தியப்படுத்துவதாகும். கும்பாபிஷே கத்தில் வைரவப் பெருமானை எழுந்தருளச் செய்து சிவாச்சாரியர்களினால் மந்திரங் கள், கிரியை பாவனைகளினால் திருவருட் சக்தியினை எழுந்தருளச் செய்து கர்ப்பக்கிரகத்தில் இருக்கும் மூர்த்திக்கு அபிஷேகம் செய்து மூர்த்தியினை சான்னித் தியம் ஏற்படுத்தி, பக்தர்கள் ஆலய வழிபாடுகளுக்கு உட்படுத்தி இஷ்ட காம்யார்த்த சித்திகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

இம் மகாகும்பாபிஷேகத்தினை நிகழ்த்தும் குருமார்கள் பல ஆலயங்களில் பிரதமகுருவாக கடமையாற்றுபவர்கள். சாதகர்களும், திறமைமிக்க அனுபவஸ்தவர் களுமாவர். எனவே எல்லோரும் இணைந்து இக்கும்பாபிஷேகத்தின் பலன் கிடைத்து வைரவப் பெருமானின் திருவருளுக்கு ஆளாகுமாறு பிரார்த்திக்கின்றேன்.

**சிவாகம சிரோண்மணி**
**பொன்.வரதராஜக்குருக்கள்**
ஆதீன பரம்பரா பிரதம குரு
கல்வியங்காடு வீரபத்திரர் ஆலயம்

# பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியாரின் ஆசியுரை

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு கேணியடி ஞானவைரவப் பெருமானுடைய திருப்பொற்பாதம் வணங்கி, இறைவனுடைய திருவருளினாலும், பக்தர்களின் பெரும் நிதியினாலும், கிராமக் காத்தல் கடவுளாக விளங்குகின்ற சில மூர்த்தங்களில் ஒன்றான ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுக்கு சித்திரைத் திங்கள் 31 ஆம் நாள் (14.05.2017) அன்று மகாகும்பாபிஷேகம் இறையருளால் எனது கைகளால் நிகழ்த்தி வைக்கும் பாக்கியம் கிடைக்கப் பெற்றேன்.

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு மேலாக இவ்வாலயத்தில் சிவபணியை செய்து வரும் அடியேன் பெருமானுடைய திருவருளினால் இக் கும்பாபிஷேகத்தை யும் நிகழ்த்தி வைக்கும் பெரும்பேறு பெற்று அளவில்லா ஆனந்தமடைகின்றேன்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாக்கிற்கு அமைவாக பக்தி சிரத்தையுடன் வைரவப்பெருமான் ஆலயத்தை புனராவர்த்தனம் செய்து விநாயகப்பெருமான், வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் தெய்வங்களுக்கு நூதன ஆலயம் அமைக்கப்பட்டு, அழகிய வர்ணக்கலைகள் தீட்டப்பட்டு, ஆலயத்தின் பூர்வதிக்கிலே அழகிய விக்கிரக அமைப்புக்கள் செய்யப்பட்டு, அழகுடன் காட்சி யளிக்கும் வைரவப்பெருமானுடைய ஆலயமானது மென்மேலும் சிறப்புப் பெற்று விளங்குவதற்கு வைரவப்பெருமானுடைய அருளாசி என்றென்றும் கிடைக்க வேண்டுமென ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

**"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும்**
**அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"**

**"பிரதிஸ்டா பூஷணம்"**
சிவஸ்ரீ. வரத கேதீஸ்வரக்குருக்கள்
(B.Com, MA)

# கேணியடி ஞானவைரவர் அருட்கடாட்ச நிழலினிலே...

கேணியடி ஞான வைரவர் அருட்கடாட்ச நிழலினிலே, எமது நிர்வாக சபையானது தெரிவு செய்யப்பட்டு மிகக் குறுகிய காலப்பகுதியிலேயே, விரைவாக ஆலய புனராவர்த்தன ஏற்பாடுகளை முன்னெடுத்து இவ்வாறான மகாகும்பாபிஷேக நிகழ்வுகளைச் சிறப்பாகச் செய்து முடிக்க இறைவன் திருவுளம் வைத்ததையிட்டு பெரு மகிழ்வு அடைகின்றோம்.

**"கேணியும் ஞானியும் ஒருங்கே அமைந்த இந்தத் திருநெல்வேலி**
**கேணியடி ஞானவைரவர் திருத்தலத்தின் மகிமைகளோ அற்புதம்.**
**வேண்டுவோருக்கு எல்லாம் வேண்டும் வரம் தருவான்..**
**ஏதும் வேண்டாது வழிபடினும் வேண்டுவன எல்லாம் தானே அருள்வான்..**
**பக்தர்களிற்கு வரவிருக்கும் தீங்குகளையும் முன்னறிந்து தடுப்பான்..."**

இந்த ஞான வைரவப் பெருமான்.

வற்றாத நன்னீர் ஊற்றாய்க் கேணியும் என்றென்றும் அருட்கடாட்சம் வழங்கும் ஞானவைரவப் பெருமானும் எமது பிரதேசத்திற்குக் கிடைத்த பெரும் சொத்துக்கள்.


நிர்வாகசபை உறுப்பினர்களும், இப்பிரதேச வாழ் மக்கள் அனைவரும் ஒற்றுமையாய், ஒருங்கிணைந்து பணியாற்றி இந்த ஆலயத்தை மென்மேலும் சிறப்பாக புனரமைத்திருக்கின்றோம்.

இனி வருகின்ற எமது வருங்கால சந்ததியினரும் இந்த ஆலயத்தின் பழமையையும் மகிமைகளையும் உணரும் பொருட்டு ஆலய வழிபாட்டு வரலாற்றையும், கும்பாபிஷேக நிகழ்வுகளையும் மற்றும் சில காட்சிப்பதிவுகளையும் இங்கே இந்த மகாகும்பாபிஷேக மலரினூடாகப் பதிவு செய்ய முற்பட்டிருக்கின்றோம்.

**கேணியடி ஞானவைரவப் பெருமானின் அருட்கடாட்சம் பெருகட்டும்..**
**அடியவர்கள் அடிபணிந்து ஆன்ம பலம் அடையட்டும்..**

**கேணியடி ஞான வைரவர்**
**ஆலய பரிபாலன சபை - 2017**

# கேணியடி ஞானவைரவர் ஆலய தல வரலாறு



**திருநெல்வேலிப் பதியினிலே...**
**ஆடியபாதம் வீதியோரமாய்...**
**ஒரு பழம்பெரும் கேணி...**
**கேணியோரமாய் ஒரு பெரும் சிலை....**
**அனைத்தையுமே காப்பதற்காய்...**
**ஒரு வைரவர் சூலம்...**

வைரவப்பெருமானின் அருளாட்சி கோலோச்சும் கேணியடித் திருத்தலம் அமைந்திருந்தது இவ்வண்ணமே. வற்றாத நிலத்தடி நன்னீரை ஊரெல்லாம் தக்கவைத்த கேணி, கால்நடைக் கூட்டங்கள் தாமே கேணிச் சரிவில் நடந்து சென்று தாகம் தணிக்க உதவிய கேணி, தண்ணீராய் இறையருளை அள்ளித் தெளித்த ஞானி வந்தடைந்த சமாதி. ஆண்டாண்டு காலமாய் ஆடியபாதத்தில் நடந்து களைத்த கால்களெல்லாம் எங்கள் வைரவப் பெருமானின் அருள் நீர் பருகி ஆறுதல் அடைந்த தலம்..

காலத்தின் வளர்ச்சியில் கேணியின் முழுப்பரிமாணத்தைத் தொலைத்து விட்டோம். எனினும் ஞானவைரவர் மகிமையில் 'கூழங்கைத் தம்பிரான்' எனும் பெரியார் திருச்சமாதி அடைந்த இடம் இதுவென்ற சேதி கேட்டோம். (பேராசிரியர் சிவலிங்கராஜாவின் கட்டுரையைக் காண்க)

| **காலப்பகுதி** | **நிகழ்வுகள்** |
|---|---|
| 1795 | கூழங்கைத் தம்பிரான் திருச்சமாதி வைக்கப்பட்டதாகக் கருதப்படுகிறது. |
| 1829 – 1867 காலப்பகுதி | கால்நடைகளிற்காகவும், ஊரின் நிலத்தடி நீர்வளத்தைப் பேணு வதற்காகவும் சமாதியை ஒட்டிக் கேணி அமைக்கப்பட்டிருக்கலாம். |
| 19ம் நூற்றாண்டுப் பகுதி | வைரவர் சூல வழிபாடும் கூழங்கைத் தம்பிரான் சமாதி மேல் அமைக்கப்பட்ட சிலை வழிபாடும் தொடர்ந்தாகக் கூறப்படுகிறது. |
| 1962 – 1963 | கேணியடி வைரவர் சனசமூக நிலையத் தொண்டர்களும் சுற்றயல் சமூகமும் இணைந்து பொது நிகழ்வுகள் நடாத்தி, அதில் சேர்ந்த பணத்தில் முதன் முதலாக சிறு கோயில் ஒன்றைக் கட்டி, ஐம்பொன்னாலான வைரவர் சூலத்தை நிறுவி திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் பிரதம குருவாகிய சண்முகரத்தின குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகம் நிகழ்த்தப்பட்டது. (இதன்போது பெரும் பகுதிக் கேணி மூடப்பட்டது) |
| 1987 செப்ரெம்பர் | கேணியடிவாழ் சமூகம் இணைந்து இக்கோயிலைச் சற்றுப் பெருப்பித்துக் கட்டியும் மூலவராக கருங்கல்லால் ஆன வைரவர் சிலையைத் தாபித்தும், பரிவாரமூர்த்திகளாக பிள்ளையார் மற்றும் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமானையும், ஐம்பொன்னாலான வைரவர் எழுந்தருளி சிலையையும் அமைத்து சங்கீத பூஷணம் பொன் சுந்தரலிங்கம் தலை மையில் கும்பாபிஷகப் பெருவிழா சுப்பிரமணிய சாஸ்திரி அனுசரனை யுடன் பரமேஸ்வரக் குருக்களால் நடாத்தப்பட்டது. (இதன்போது பகுதிக் கேணி மூடப்பட்டு, தற்போது உள்ளவாறான கிணறு போன்ற பகுதி மாத்திரமே காணப்பட்டது) |

| | |
|---|---|
| 2002 யூன் 12 | அமரர் வல்லிபுரம் இராசையா அவர்களின் ஒருங்கிணைப்பில், பலரது ஒத்துழைப்போடும் வரதராஜக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகப் பெருவிழா நடாத்தப்பட்டது. |
| 2017 மே 14 | கணபதி மற்றும் வள்ளி தெய்வானை சமேத முருகப்பெருமான் கருங்கல் விக்கிரகங்களும், சிலைகளுடன் கூடிய முகப்பு மண்டபமும் ஏனைய சிறுமாற்றங்களுடனும் கும்பாபிஷகப் பெருவிழா வரதராஜக் குருக்கள் அனுசரனையுடன் கேதீஸ்வரக் குருக்களினால் நடாத்தப்பட்டது. |

இன்று இந்த கும்பாபிஷேக நிகழ்வுகளினால் சிறப்புறும் நன்னாள்...
சூழும் தொல்லைகள் நீக்கி, துயர் அகற்றி, முன்னை வினைப்பயனின் துன்பங்கள் போக்கி எம் மக்களைக் காக்க இங்கு எழுந்தருளி வந்திருக்கும் எம்பெருமானே.. .இழந்தவற்றை மீட்டு உயிர்களைக் காத்து ஏற்றம் அடையச் செய்வாய் எம்பெருமானே...

சிறுபரப்பில் அமைந்திருந்தாலும் இத்திருத்தலத்தின் மகிமைகள் மகத்தானவை. கற்பூரம் ஏற்றித் தொழுத கைகளை, கைவிடாமல் காப்பான். நினைத்த காரியம் நிறைவேற நித்தம் உடன் நிற்பான். தலை தாழ்த்தித் தொழுதவர்கள் சந்ததிகள் தோறும் காப்பான்.

திருநெல்வேலித் தலங்காக்கும் காவலனாய் பிள்ளையார் ஒருபுறமாய் வீற்றிருக்க, இங்கே அறிவுத்தாகம் தீர்த்து அனைவரையும் அரவணைக்க ஒரு ஞானவைரவப் பெருமான் எழுந்தருளியுள்ளார்.

**கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவான்..**
**கும்பிட்ட கைகளுக்குக் காவல் தருவான்..**
**கிராமங்கள் தோறும் வைரவ சூலமாய் நிற்பான்..**
**வீடுகள் வரையும் நாய் உருவில் வருவான்..**

யாரும் எங்கும் எப்போதும் எப்படியும் வழிபடக்கூடிய ஒரு அரும்பெருந் தெய்வம் தான் வைரவக் கடவுள். குறிப்பாக இலங்கையின் வட–கிழக்குப் பகுதிகளைப் பொறுத்தவரையில் வைரவர் வழிபாடானது பன்னெடுங்காலந்தோறும் மிகச் சிறப்பாக நடந்து கொண்டு வந்ததை அறியக்கூடியதாக உள்ளது.

வைரவக் கடவுளானவர் எமது அன்றாடக் காரியங்களை வழிநடத்துபவராக, கிராமங்களிலே மக்களையும், வயல், தோட்டம், கால்நடைகள் மற்றும் நீர் நிலைகள் போன்றவற்றைக் காப்பவராக, நெடுந்தூரப் பயணங்களில் வழித்துணையாக வருபவராக, விபத்துக்கள் நடைபெறாது காப்பவராகக் காணப்படுகின்றார். இன்றும் கூட, பெருவயல், தோட்டம் மற்றும் நீர்நிலைகளை அண்டிய பகுதிகள் (கேணியடி, கிணற்றடி), பெருவழிப் பயணங்கள் (உதாரணம் – வல்லை வெளி) மற்றும் முச்சந்தி, நாற்சந்தி போன்ற இடங்களில் வைரவர் தலங்களை அல்லது வைரவர் சூல வழிபாடுகள் நடைபெறுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தத் திருநெல்வேலிக் கேணியடி வைரவரும், நீர்நிலையான கேணியைப் பாதுகாக்கவும், முன்னைய காலங்களில் ஆளரவமற்ற ஆடியபாதம் வீதிவழியாகப் பயணிக்கும் மக்களின் காவலனாகவும், இதனை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட பாரிய விவசாய நிலங்களின் பாதுகாவலனாகவும் இந்த வைரவர் ஆலயம் உருப்பெற்றது எனலாம்.

வைரவர் வழிபாடானது மிக அண்மைக்காலம் வரை (1970–1980) ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்டு மக்கள் வயப்பட்டதாகவே காணப்பட்டது. விளக்கேற்றுதல், தேங்காய் உடைத்தல், கற்பூரம் எரித்தல் போன்ற சாதாரண அன்றாட வழிபாடுகளை சிறுவர்கள், பெண்கள், பெரியவர்கள் என்ற பேதமின்றி அனைவரும் கைக்கொண்ட தாகத் தெரிகின்றது. (பெண்கள் மாதவிலக்குக் காலத்தில் ஆலயங்களில் வழி பாடு இயற்றக்கூடாது என்பது கூட வைரவர் விடயத்தில் விலக்களிக்கப்பட்டதாக சில குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.)

வைரவர் தொடர்பான விசேட வழிபாடுகளும் மக்கள் மயப்பட்டதாகவே காணப்பட்டு வந்தன. பொங்கல், குளிர்த்தி, வைரவர் மடை என்ற பெயர்களில் மக்கள் கூட்டாக இணைந்து வைரவர் முன்பாக பொங்கி, வடை சுட்டு, படைத்து வழிபட்டு வந்தனர். இன்றும் இந்த முறைகள் இவ்வாலயத்தில் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. சக்கரைப்பொங்கல், மோதகம், வடை மாலை, அவல், கடலை, பழங்கள் எனப் படைத்து வைரவப் பெருமானின் அருளாசி வேண்டி அனைவரும் தொழுது நிற்கின்றனர்.

சாமான்ய மனிதர்களின் சின்னச் சின்ன வேண்டுதல்களையும் விருப்பத் துடன் நிறைவேற்றி வைப்பவன் என்பதால், நினைத்த காரியம் கைகூட வைரவர் மீது நேர்த்தி வைத்து வழிபடும் முறை இன்றுவரை தொடர்கிறது. நவக்கிரகங்களின் பிடியில் வாழ்க்கை அல்லாடும் போதெல்லாம், நவக்கிரக நாயகனாகிய வைரவரை வழிபட கிரகங்களின் கிராதகப் பார்வைகளும் அருட்பார்வைகளாகி வாழ்வில் நலம் சேர்க்கும்.

எமது தமிழ் மக்களின் பாரம்பரியத்தில் வீட்டுக்கொரு நாய் வளர்த்தல் என்பது பன்னெடுங்காலமாக பழக்கத்தில் இருந்து வந்துள்ளது. இது வெறுமனே நாய் வெளியார் வருகையில் குரைத்து வீட்டைக் காக்கும் என்பதற்காக மட்டுமல்ல. வைரவப் பெருமானே நாய் உருவில் வந்து எமது வீடுகள், சொத்துக்களையும் எங்களையும் காப்பதாக ஆழ்மன ரீதியாக இருந்து வந்த, முன்னோர் ஊடாக எமக்குக் கடத்தப் பட்டு வந்த நம்பிக்கையே காரணமாகும். இன்றும் யாழ்ப்பாணத்தில் அதிக சதவிகித மானோர் வீட்டில் நாய்கள் வளர்த்து வருவது கண்கூடு.

இந்தத் திருநெல்வேலி மண் வணங்கும் மகத்தான வைரவப் பெருமானுக்கு கும்பாபிஷேகப் பெருவிழா நடாத்தி மகிழ்வதிலே இந்த மக்கள் மனமெங்கும் பெருநிறைவு.

**உன் புன்னகையால் இந்த நிலமதிலே புதுப்பொலிவு பூக்கட்டும்..**
**சோகங்கள் மறைந்து மனங்கள் மகிழ்ச்சியிலே சிலிர்க்கட்டும்..**
**உன் பாதங்கள் வணங்கி வாழ்வில் முன்னேற்றம் காண்போம் வாரீர்..**

**"கேணியடி வைரவர் தாள் பணிந்தோர்க்கெலாம்**
**ஏணியாம் வாழ்விற் சிறப்பு"**

# கேணியடி திருவருள்மிகு ஸ்ரீ ஞானவைரவப் பெருமானின் கும்பாபிஷேகப் பெருவிழா ஓர் பார்வை

**செ. கிரிசாந் – ஊடகவியலாளர்**

ஈழத்திருநாட்டின் திருநெல்வேலிப் பகுதியில் சைவமும் தமிழும், தானதர்மங்களும், புராணபடனமும், திருமுறைப் பாராயணங்களும் ஓங்கி நிற்கும் கேணியடி எனும் பழமை மிக்க திருப்பதியில் உருவத்திருமேனி தாங்கி அருள்பாலிக்கின்ற கேணியடி திருவருள்மிகு ஸ்ரீ ஞானவைரவப் பெருமானுக்கும் ஏனைய நூதன மூர்த்திகளான விநாயகர், வள்ளி, தேவசேனா உடனுறைகின்ற முருகனுக்கும் வேத சிவாகம விதிமுறைகளுக்கு அமைய புனராவர்த்தன சம்புரோக்ஷண அஷ்டபந்தன பஞ்ச (5) குண்டபக்ஷ உத்தம மகாயாக பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் 14.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை வெகு விமரிசையாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வுக்கான பூர்வாங்கக் கிரியைகள் 11.05.2017 வியாழக்கிழமை காலை 5.55 மணிமுதல் 6.55 மணிவரையுள்ள சுபவேளையில் இடம்பெற்றது. அன்று காலை குரு ஹோரை பிரம்ம முகூர்த்தத்தில் கர்மாரம்பம், ஸ்ரீபால விநாயகர் வழிபாடு, நவக்கிரக ஹோமம், யந்திர பூஜை போன்ற பல நிகழ்வுகளும், மாலை 5.30 மணி முதல் தருண கணபதி ஆராதனை, புண்யாகவாசனம், கிராமசாந்தி என்பனவும் இடம்பெற்றன.

12.05.2017 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பக்தி கணபதி ஆராதனை, சூர்யாக்கினி, கங்காபூஜை, சங்கிராந்திகள் முதலான நிகழ்வுகளும், மாலை 5 மணிமுதல் சித்தி கணபதி ஆராதனை, ரட்ஷா பந்தனம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. மாலை 6 மணி முதல் 7.46 மணி வரையான காலப்பகுதிக்குள் ஸ்தூபி ஸ்தாபனம், தீபஸ்தானம், யந்திரஸ் தானம் முதலிய நிகழ்வுகளும் இடம்பெற்றன.

13.05.2017 சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பல பூசை நிகழ்வுகள் இடம்பெற்று, காலை 8 மணி முதல் மாலை 3 மணிவரை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. அன்றைய தினம் மாலை 5 மணிக்கு ஸ்ரீ ஏகாக்ஷர கணபதி ஆராதனை முதல் பரிவார யாக பூஜை வரை சிறப்பாக இடம்பெற்றன.

14.05.2017 ஞாயிற்றுக்கிழமை மகா கும்பாபிஷேகம் இடம்பெற்றது. காலை 6 மணி முதல் மகா கணபதி ஆராதனையுடன் தொடங்கிய பூஜை நிகழ்வுகளைத் தொடர்ந்து பிரதான கும்பம் உட்பட ஏனைய கும்பங்கள் சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க வீதிவலமாக எடுத்துவரப்பட்டு காலை 09 மணி முதல் முற்பகல் 10.15 மணி வரையுள்ள மிதுன லக்ன மூல நட்சத்திரமும், சதுர்த்தி திதியும், அமிர்தசித்த யோகமும் கூடிய சுபதினத்தில் மஹா கும்பாபிஷேகம் இடம்பெற்றது. தொடர்ந்து பரிவார மூர்த்தி கள் கும்பாபிஷேகம், பிராயச்சித்தஹோமம், சிவாச்சாரிய பூஜை, ஆசீர்வாதம், ஆசியுரை, அருளுரையினை தொடர்ந்து 11.30 மணிக்கு மகா அபிஷேகத்தை தொடர்ந்து பூஜைகள் இடம்பெற்றன. மாலை 6.30 மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜைகளைத் தொடர்ந்து திருவூஞ்சல் இடம்பெற்று சுவாமி வீதிவலமும் இடம்பெற்றது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து சிவாச்சாரியர்களுக்கு கௌரவப் பட்டம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. மேற்படி ஆலய மகாகும்பாபிஷேகத்தில் 11.05.2017 – 14.05.2017

பஞ்சகுண்ட சிவாச்சாரியராக இருந்து சிறப்பாக பணியாற்றியமைக்காக சிவஸ்ரீ இராம சோமாஸ்கந்தக் குருக்கள் – கிரியா ஜோதி, சிவஸ்ரீ நாகேந்திர திவாகரக் குருக்கள் – சிவாகம கிரியா வித்தகர், சிவஸ்ரீ நாகேந்திர கிருபாகரக் குருக்கள் – சிவகாம சிரோண்மணி, சிவஸ்ரீ சீதா சாரங்கக் குருக்கள் – சிவாகம பூஷணம் போன்ற கௌரவப் பட்டங்களும்,

யாகசம்ரட்சகராக இருந்து சிறப்பாக பணியாற்றியமைக்காக சிவஸ்ரீ ம.கௌதம சர்மா – யாசகம்ரட்சக பாலகர், பிரம்ம ஸ்ரீ க.துராகீச சர்மா – யாகசம் ரட்சக சுடரொளி, பிரம்மஸ்ரீ கை.ஹரிஸ்வர சர்மா – யாசகம் ரட்சக இளஞ்சுடர் எனும் கௌரவப் பட்டங்களோடு, சர்வசாதகாசிரியராக இருந்து சிறப்பாக பணியாற்றிய சிவஸ்ரீ மஹா ஸ்ரீவத்சாங்க குருக்களுக்கு – சிவாகம வைதீக சாதக சிரோண்மணி, சிவஸ்ரீ சிவபால கௌரிசங்கர சர்மா – ஸ்தோத்திர வித்தகர், சிவஸ்ரீ அருணாசல ஐயப்பதாசக் குருக்கள் – சிவபூஜா துரந்தரர் எனும் கௌரவ பட்டங்களும்,

சர்வபோதகாசிரியராக இருந்து சிறப்பாக பணியாற்றியமைக்காக சிவஸ்ரீ பொன் வரதராஜக் குருக்கள் – சிவாகம கிரியா ரத்தினம், சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் – வைதீக கிரியா வித்தகர் எனும் பட்டங்களும் ஆலய பரிபாலசபை யினரால் வழங்கி வைக்கப்பட்டன. கும்பாபிஷேகம் மங்களகரமாக நிகழ திருவருளோடு குருவாக இருந்து அருளாசி வழங்கிய வசிட்ட குருவாக "வேதாகம ஞான பாஸ்கரன்" – சிவஸ்ரீ தாணு மஹாதேவ சிவாச்சாரியார் (அதிபர், தர்ம சாஸ்தா குருகுலம், காயத்திரிபீடம், இணுவில்) அவர்களும், பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியராக "சிவாகம கிரியா சிரோன்மணி" சிவஸ்ரீ வரத கேதீஸ்வர சிவாச்சாரியார் (ஆதீன பரம்பரா குரு, வீரபத்திரர் தேவஸ்தானம், கல்வியங்காடு) அவர்களும் விளங்கினர்.

சர்வ சாதகாசிரியர்களாக சிவகாம, வைதீக சாதக சிரோண்மணி சிவஸ்ரீ மஹா ஸ்ரீவத்சாங்க குருக்கள் (இணுவில்), சிவஸ்ரீ வரத நகுலேஸ்வரக் குருக்கள் (சுவிஸ்லாந்து), ஸ்தோத்திர வித்தகர் சிவஸ்ரீ சிவபால கௌரி சங்கர சர்மா (இணுவில்), சிவஸ்ரீ வெ. மயூரநாதக் குருக்கள் (நியூசிலாந்து), சிவஸ்ரீ அருணாசல ஐயப்பதாசக் குருக்கள் (கல்வியங்காடு) ஆகியோரும், சர்வ போதகாசிரியர்களாக சிவஸ்ரீ பொன் வரதராஜக் குருக்கள் (ஆதீன பரம்பரா பிரதம குரு, வீரபத்திரர் தேவஸ்தானம், கல்வியங்காடு), வைதீக கிரியா வித்தகர் – முகூர்த்த நிர்ணயம் சிவஸ்ரீ குமார சரவணபவக் குருக்கள் (இணுவில்) ஆகியோரும், பஞ்ச குண்ட சிவாச்சாரியர்களாக சிவஸ்ரீ வரத திவாரகேஸ்வரக் குருக்கள் (லண்டன்), சிவஸ்ரீ இராம சோமஸ்கந்த குருக்கள் (கம்பளை), சிவஸ்ரீ நாகேந்திர திவாகரக் குருக்கள் (தாவடி), சிவஸ்ரீ சீதா சாரங்க குருக்கள் (கல்வியங்காடு), சிவஸ்ரீ நாகேந்திர கிருபாகரக் குருக்கள் (அளவெட்டி) ஆகியோரும், யாகசம்ரட்சகர்களாக பிரம்மஸ்ரீ கை. ஹரிஸ்வர சர்மா, பிரம்மஸ்ரீ க. துராகீச சர்மா, பிரம்ம ஸ்ரீ ம.கௌதம சர்மா ஆகியோரும் சிறப்பாக நிகழ்த்தினார்.

யாகசாலை அலங்காரத்தினை நாயன்மார்கட்டைச் சேர்ந்த குகன் ஐயாவும், ஆசியுரை யினை சிவஸ்ரீ தாணு மஹாதேவக் குருக்களும், அருளுரையினை நல்லை ஆதீன குரு முதல் வரான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும் நிகழ்த்தினர்.

உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களின் நிதிப் பங்களிப்பில் புனருத்தாரணம் செய்யப் பட்ட இவ்வாலயம் தற்போது புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது. கருங்கல்லில் பிள்ளை யார், வள்ளி தேவசேனா சமேத முருகன்விக்கிரகங்கள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் புதிதாக ஆலயத்துக்கான மடப்பள்ளியும் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அழகிய விக்ரக அமைப்புக்களுடன் கூடிய ஆலய முகப்பு நுழைவாயிலும் காண்பவர் கண்கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

# கேணியடி வைரவர் கோயிலும் கூழங்கைத் தம்பிரான் சமாதியும்

**பேராசிரியார் எஸ்.சிவலிங்கராஜா**
முன்னாள் தலைவர், தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்திருக்கும் அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தின் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெறும் இந்தநாளில் இக்கிராமச் சூழல் பற்றியும் இவ்வாலயம் பற்றியும் சிந்திப்பது பயனுடையதாகும்.

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த திருநெல்வேலிக்குப் பண்டு தொட்டே சைவத்தமிழ்த் தொடர்பு இருந்துவந்துள்ளது. திருநெல்வேலியிலே சைவாலயங்கள் பல உள்ளன. சிவன்கோயில், அம்மன் கோயில் (முத்துமாரி) தலங்காவற் பிள்ளையார் கோயில், பத்திரகாளி அம்மன் கோயில், அரசடி சிவகாமி அம்மன் கோயில், பழங் கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் கோயில், வாலையம்மன் கோயில், வெள்ளைப் பிள்ளையார் கோயில் முதலான பழமை வாய்ந்த கோயில்கள் பல உள்ளன. அண்மைக் காலத்திலே புதிதாகப் பல கோயில்கள் தோற்றம் பெற்றுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

பனை, தென்னை, மா, பலா, வேம்பு, இலுப்பை, புளி முதலியன வானுற வோங்கி வளம் பெற வளர்ந்து இக்கிராமத்தின் இயற்கை எழிலை வெளிப் படுத்தின. அகன்ற நிலப்பரப்பைக் கொண்ட இக்கிராமத்துப் புறச்சூழலிலே சிறுபற் றைகளும் வளர்ந்து மூடி இருந்ததாக அறிய முடிகின்றது. நெல்வயல், தோட்டம், குடி யிருப்பு என்பவற்றை உள்ளடக்கிய பெரிய நிலப்பரப்பைக் கொண்ட செழிப்பான கிராம மாகத் திருநெல்வேலி விளங்குகின்றது.

இக்கிராமத்தில் பண்டு தொட்டே விவசாயம், மந்தை வளர்ப்பு (பசுவளர்ப்பு) உயர் அரச உத்தியோகங்கள், வணிகம் முதலானவை பிரதான தொழில் முயற்சி களாக இருந்து வந்தன. மிக அண்மைக் காலம்வரை பசுவளர்ப்பு இக் கிராமத்திலே மிகச் சிறப்புற்றிருந்தது. இதனாலேதான் பாற்பண்ணை என வழங்கும் பால்சேகரிப்பு விற்பனை நிலையம் திருநெல்வேலியிலே அமையப்பெற்றது எனக் கருதலாம்.

திருநெல்வேலிச் சந்தை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், கல்வியங்காடு, (நீர்வேலி உட்பட) முதலிய இடங்களின்

விளைபொருள்கள் இச்சந்தையூடாகவே விற்பனை செய்யப்பட்டன. யாழ்ப்பாண நகரையண்டிய மிகப்பெரிய சந்தையாகத் திருநெல்வேலி சந்தையே விளங்குகின்றது.

பறங்கியர் காலத்திலே "பசுவதைக்கு அஞ்சிப் பரதேசம் போனவர்" என்று பண்டிதமணி கூறும் ஸ்ரீலஸ்ரீஞானப்பிரகாச சுவாமிகள் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். இவரை நாவலரின் தாய்வழி மூதாதையர் என்பர். இவர் வாழ்ந்த இடம் இன்றும் புலவர்வளவு என்று அழைக்கப்படுகின்றது. (தகவல் க.சி.குலரத்தினம்)

திருநெல்வேலியிலே சைவாசிரியகலாசாலை, பரமேஸ்வராக் கல்லூரி என்பவை நிறுவப்பட்டமைக்கு இப்பகுதியின் சைவத்தமிழ்ப்பண்பாட்டு வாழ்வியலும் வலுவான காரணியாகலாம். இக்கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டதும் இங்கு பயிலும் மாணாக்கர்களும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பலரும் திருநெல்வேலியிலே குடி யேறினர். பின்னர் பல்கலைக்கழகத்தின் வருகையோடு இந்தக் குடியேற்றம் பரந்தள வில் இடம்பெற்றது.

ஏலவே திருநெல்வேலிக்கிருந்த கல்விப் பாரம்பரியத்துடன் இப்புதிய நிறுவன வழிப்பட்ட கல்வி பாரம்பரியமும் சங்கமித்தது. இதனாலே திருநெல்வேலி பொருளி யல் வளத்திலும் புலமை வளத்திலும் உன்னத நிலைமையை அடைந்தது.

அக்காலத்துத் திருநெல்வேலி இளைஞர்கள் சேர்ந்து வை.எம்.எச்.ஏ எனும் அமைப்பினை நிறுவிக் கலை, கலாசாரம், பண்பாடு, விளையாட்டு, சமூகப்பணிஎனப் பலதளத்திலே செயற்பட்டனர். இதனைத் தொடர்ந்து திருநெல்வேலிக் கலாமன்றம் எனும் அமைப்பும் சமய, சமூக, கல்வி, விளையாட்டு, பண்பாட்டு பாரம்பரிய நிகழ்வு களை முன்னெடுத்தது. இந்த இரண்டு நிறுவனங்களும் இன்றும் திறம்படச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துக் கல்விமரபு மிகவும் நீண்ட பாரம்பரியத்தை உடையது எனலாம். எனினும் யாழ்ப்பாண அரசர்கள் காலத்தில் இருந்தே சான்றாதாரங்களுடன் இக்கல்விப் புலமைப் பாரம்பரியத்தை நிறுவ முடிகின்றது. யாழ்ப்பாண மன்னர்கள் காலத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் ஈழத்திலே தமிழ்க்கல்வியும் சைவமும் பெரும்பாதிப்பைச் சந்தித்தன. போர்த்துக்கேயருக்குப் பின் ஆட்சிக்கு வந்த ஒல்லாந்தர் காலத்திலே தமிழ்க் கல்வி மீண்டும் துளிர்விட்டுத் தழைக்கத் தொடங்கியது. இந்தக்காலப்பகுதியை ஒட்டியே இன்று கேணியடி வைரவர் கோயில் என அழைக்கப்படும் ஞானவைரவர் ஆலயத்தின் தோற்றத்தினையும் நோக்க வேண்டியுள்ளது.

ஈழத்துத் தமிழ்க்கல்விப் பாரம்பரியத்தின் ஓட்டத்தைத் துரிதப்படுத்திய புலமையாளராகக் கூழங்கைத் தம்பிரானைக் குறிப்பிடலாம். கூழங்கைத் தம்பிரான்

கனகசபாபதியோகி என்ற பேராலும் அழைக்கப்பட்டார். வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலை வைத்திலிங்கச் செட்டியாரைக் கொண்டு கட்டுவித்தவரும் கனகசபாபதி யோகியாகிய கூழங்கைத் தம்பிரானேயாவார். இவரிடம் பாடங் கேட்டவர்களே ஈழ நாட்டின் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் தமிழ்க்கல்வி மேம்பாட்டிற்காக உழைத்தவர்கள் எனலாம்.

இலக்கிய இலக்கணங்களிலே சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்த கூழங்கைத் தம்பிரானிடம் தமிழரல்லாதவர்களும் கிறிஸ்தவர்களும் வரன்முறையதாகப் பாடங் கேட்டனர் என்று கூறப்படுகின்றது. தமிழ், சைவநூல்களை எழுதிய கூழங்கைத் தம்பிரான் சிறிதுகாலம் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக் கிறிஸ்தவராக இருந்த போது யோசேப்பு புராணம் எனும் நூலையும் எழுதியுள்ளார். கிறிஸ்தவத்திலிருந்து மீண்டும் சைவத்திற்கு வந்த கூழங்கைத் தம்பிரான் சைவநூல்களையும் இலக்கண நூல் களையும் எழுதினார். மாணாக்கர்களுக்குக் கல்விபோதிப்பதிலும் தமது காலத்தைக் கழித்த கனகசபாபதியோகி எனும் கூழங்கைத் தம்பிரான் அரியாலையிலே வாழ்ந்து வந்த போது இறைபதம் எய்தினர். இவரைத் திருநெல்வேலியிலே சமாதி வைத்தார்கள் என்று கூறப்படுகின்றது. இதுபற்றிக் கல்லடிவேலுப்பிள்ளை பின்வருமாறு கூறியுள்ளார்.

**"இவர் (கூழங்கைத் தம்பிரான்) பிற்காலத்திலே சுண்டிக்குழிக் கோயிற் பற்றைச் சேர்ந்த சிவியாதெரு இவர்க்கு உறைவிடமாய் இருந்தது. அதிவிருத்தாப் பியவயதில் தேவியோகமாகி நல்லூரைச் சார்ந்த திருநெல்வேலியிற் சமாதிருத் தப்பட்டார் ஆங்கிலேயர் கையில் யாழ்ப்பாணம் அகப்பட்ட காலத்தில் கிறீஸ் தாப்தம் 1795ம் வருடம் இவரது மரண சம்பவம் நடந்தது" (கல்லடி வேலுப் பிள்ளை, யா.வை.கௌ ப.170)**



கூழங்கைத் தம்பிரானைச் சமாதிவைத்த இடத்திலேயே திருநெல்வேலி ஞானவைரவர் ஆலயம் அமைந்திருக்கிறது என்பர். முகாந்திரம் குல சபாநாதன் கூழங்கைத் தம்பிரானைச் சமாதிவைத்த இடம் கேணியடிக்கு அருகிலேயே என்று தாம் அரிதின் முயன்று பெற்ற தகவல்களைக் கொண்டு நிறுவியுள்ளார். அக்காலத்திலே (50களில்) வெளிவந்த ஸ்ரீலங்கா என்னும் அரசவெளியீட்டுச் சஞ்சிகையிலே இத் தகவலைத் தந்ததாக நினைவுண்டு. இன்னும் இச்செய்தியைக் கா.சி.குலரத்தினம் அவர்களும் உறுதிப்படுத்தியுள்ளார்.

"டைக்துரை ஏசண்டர் (1829–1867) காலத்திலே தெருக்களின் இருபக்கங் களிலும் நிழல் தரும் மரங்களை நாட்டியும், வழிச்செல்வோர் தங்குவதற்கு வசதியான மடங்களும் நீருண்ணக் கிணறுகளும் வேண்டிய இடங்களில் அமைத்தும்"– எனவரும் செய்தியின்படி இக்கேணி டைக்துரை காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என ஊகிக் கலாம். இதன் அருகில் ஒரு மடமும் இருந்திருக்கக்கூடும். சமாதி வைக்கப்பட்டதன் பின்னரே ஆலயம் தோன்றியிருக்கக்கூடும் எனக் கருதலாம்.

அக்காலத்திலே திருநெல்வேலி அடர்த்தியான குடியிருப்பைக் கொண்ட தாக இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 19ஆம் நூற்றாண்டிலே 'கொலரா' எனும் வாந்திபேதியால் பெரும்பாலானோர் இறக்க அவர்களைத் தகனம் செய்வதற்கு யாழ்ப்பாணத்திலே உள்ள சுடுகாடுகள் போதாமையால் ஆறுமுக நாவலர் அவர்களே மக்கள் குடியிருப்பு இல்லாத இடமான திருநெல்வேலியிலே இந்துமயானத்தை ஆரம் பித்தார் என்று கூறப்படுகின்றது.

கேணியடிவைரவர் ஆலயச் சூழலிலே சீமெந்தினால் செய்யப்பட்ட சிற்ப மொன்றும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. புகழ்பெற்ற சைவ ஆலயங்கள் பல சமாதிக் கோயில்களாக இருப்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும். சமாதிக் கோயில்களுக்குத் திருவருள் அதிகம் என்று அடியார்கள் கூறுவர்.

இந்தவகையிலே திருநெல்வேலி கேணியடி வைரவர் ஆலயம் ஈழத்தின் தமிழ்ப்புலமைப் பாரம்பரியத்தின் மூலவர்களுள் ஒருவரான கூழங்கைத் தம்பிரான் எனும் கனகசபாபதியோகி என்பவருடன் தொடர்பு பெறுகின்றமை எமது பண்பாட்டிற்கு வலுச்சேர்க்கின்றது என்று கூறலாம்.

**தகவல் தந்து குலசபாநாதனின் கருத்தை உறுதிப்படுத்தியவர்கள்**

**1. திரு.கா.சி.குலரத்தினம்**

**2. வழக்கறிஞர் திரு.பொன்னையா(திருநெல்வேலி)**

**3. அமரர் தம்பையா ஆசிரியர் (திருநெல்வேலி)**

# ஞான ஆட்சி புரியும் ஞானவைரவர்

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
ஓய்வு நிலை - உதவிப் பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**1. திருநெல்வேலி கிராமத்தின் பெருமை**

சிவபூமியாகிய ஈழமணித்திருநாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு ஞானபூமியாக மிளிர்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவமும் தமிழும் ஒருங்கே வளர்ந்த கிராமங்களில் திருநெல்வேலிக் கிராமம் முதன்மை இடம்பெறுகின்றது. திருநெல்வேலிப் பிரதேசத்தை கோயிற் கிராாமம் என்றும் கூறலாம். சிவன், அம்மன், பிள்ளையார், வைரவர் ஆகியோருக்கான பல ஆலயங்கள் இக்கிராமம் முழுவதும் வியாபித்துக் காணப்படுகின்றன. பசுவதையை எதிர்த்தும் பாரத தேசம் சென்ற ஞானப்பிரகாசர் திருநெல்வேலியிலே பிறந்தவர். சைவ சேனாதிபதியாக இருந்த நாவலர் பெருமானின் முன்னோடிப் பரம்பரையில் தோன்றியவர். நாவலருடைய தாயாராகிய சிவகாமி அம்மையார் ஞானப்பிரகாசர் மரபில் தோன்றியவர். வடமொழி, தமிழ்மொழி ஆகியவற்றில் மிகவும் பாண்டித்தியம் பெற்ற ஞானப்பிரகாசர் சைவசித்தாந்த தத்துவத்தை விளக்கும் அரிய நூல்கள் பலவற்றை இருமொழிகளிலும் எழுதியுள்ளார்.

சைவத்தமிழ்க் கல்வியை வளர்க்கும் பல நிறுவனங்கள் திருநெல்வேலியிலேயே தோற்றம் பெற்றன. சைவக் கல்வியின் வளர்ச்சிக்கு அரும்பணிகள் புரிந்த சேர் பொன் ராமநாத வள்ளல் 1923 ஆம் ஆண்டில் பரமேஸ்வராக் கல்லூரியைத் திருநெல்வேலியில் நிறுவினார். இக்கல்லூரி இருந்த இடத்திலேயே யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. சைவப்பாடசாலைகைளை பரிபாலிப்பதற்கான பலமான நிறுவன அமைப்பு ஒன்று அவசியம் என்பதை உணர்ந்த பல பெரியோர்களின் கூட்டு முயற்சியினால் 1922ம் ஆண்டில் திருநெல்வேலியில் சைவவித்தியா விருத்திச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. 150க்கும் மேற்பட்ட சைவப்பாடசாலைகளை ஈழத்தின் பல பாகங்களிலும் நிறுவிச் சைவக்கல்வியை வளர்க்கும் உயர்கல்வி நிறுவனமாக வளர்த்து இந்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் வரையிலும் சைவவித்தியா விருத்திச் சங்கம் தொடர்ந்து செயற்பட்டது. சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் வளர்ச்சிக்காகத் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றிய பெருமகனாக இந்துபோர்ட் க.இராஜரத்தினம் திகழ்ந்தார். 1928ம் ஆண்டில் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை நிறுவப்பட்டது. சைவப்பண்பாட்டோடு கூடிய ஆசிரியர்களை உருவாக்கிய உயர்கல்வி நிலையமாக மூன்று தசாப்தங்களுக்கு மேலாகச் சைவாசிரிய கலாசாலை இயங்கி வந்தது. மயிலிட்டி சுவாமிநாதன் இதன் முதல் அதிபராகச் செயற்பட்டார். மௌன முனிவர் பொ.கைலாசபதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகியோர் விரிவுரையாளர்களாக இருந்தார்கள். ஆசிரிய மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குரிய சாதனா பாடசாலையாக முத்துத்தம்பி மகாவித்தியாலயம் திகழ்ந்தது. இந்துச் சூழலில் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்பிக்கும் காவிய பாடசாலையும் சில வருடகாலம் சிறப்பாக இயங்கியது.

சேர் பொன் இராமநாதனால் நிறுவப்பட்ட பரமேஸ்வராக் கல்லூரி வளாகத்தில் பண்டித ஆசிரியர் கலாசாலை சில வருட காலம் சிறப்பாகச் செயற்பட்டது. மூன்று வருடகாலம் பண்டிதர் படிப்பினை முடித்து பரீட்சையில் சித்தி எய்தியவர்களுக்கு இரண்டு வருடகால ஆசிரியப் பயிற்சி வழங்கப்பட்டது. இக்கலாசாலையில் உரு

வாகியவர்கள் தமிழ்மொழியில் மிகவும் புலமையுடையவர்களாக இருந்தார்கள். பண்டிதர் க.சச்சிதானந்தம், பண்டிதர் வீரகத்தி, வித்துவான் திருநாவுக்கரசு ஆகியோர் இக்கலாசாலை யில் கல்வி கற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

**2. யாழ்ப்பாணக் குடாநாட்டில் வைரவர் வழிபாடு**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வைரவர் வழிபாடு தனித்துவமான ஒருநிலையில் காணப்படுகின்றது. சாதாரணமாக ஒரு மரத்தின் கீழ் திரிசூல வடிவில் இருப்பது முதல் சகல பரிவாரக் கோயில்களுக்கும் மத்தியில் கர்ப்பக்கிருக மூர்த்தியாக வைரவர் விளங்குதல் வரை வைரவரின் திருத்தலங்கள் பல்வேறு நிலைகளில் உள்ளன. வைரவப் பெருமானுக்கு க்ஷேத்திரபாலர் என்றொரு பெயரும் உண்டு. க்ஷேத்திரபாலர் என்பதற்கு கோயிலைக் காப்பவர் என்பது பொருளாகும். ஆலயங்களின் காவல் தெய்வமாக மாத்திரமல்லாது கிராமங்களின் காவல் தெய்வமாகவும் வைரவப் பெருமானை நம்ம வர்கள் வணங்கி வருகிறார்கள். குறிப்பிட்ட சில தினங்களில் மட்டும் விளக்கேற்றும் நிலை முதல் நித்திய நைமித்திக நெறியில் கிரியைகள் நடைபெறும் நிலையீறாக வைரவர் வழிபாடு நடைபெற்று வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் வைரவர் பெருமானுக்கு கோயில் இல்லாத கிராமங்களே இல்லை எனலாம். வைரவர் கிராமத் தெய்வம், காவல் தெய்வம், இரத்தப் பலியேற்கும் தெய்வம் என்பன போன்ற நம்பிக்கைகளும் நம்மவர்களிடம் உண்டு. அவர் சிவகுமாரர்கள் நால்வரில் ஒருவர் ஆதலால் சாட்க்ஷாத் சிவபெருமானே அவர் என்ற கருத்தும் ஒருபுறம் உண்டு.

சிவனின் முக்கியமான இருபத்தைந்து வடிவங்களில் வைரவர் மூர்த்தமும் ஒன்றாகும். எத்தகைய கொடியவர்களையும் தம் மறக்கருணையால் அடியவராக்கி ஆட்கொள்ளும் பொருட்டுச் சிவபெருமானே பல்வேறு மூர்த்திகளாகவும் வடிவம் கொண்டுள்ளார் என்பதைப் புராண வரலாறுகளினூடாக அறிகின்றோம். துஷ்ட நிக்ஷணம் செய்து சிக்ஷ்ட பரிபாலனம் செய்கின்ற சிவனின் ஓர் வடிவமாகவே வைரவர் மூர்த்தம் காணப்படுகின்றது. சிவபெருமான் பிரம்மனின் பாவத்தைத் தொலைக் கவும் மற்றத் தேவர்களின் செருக்கை அகற்றவும் திருவுளம் பற்றினார். நீலநிறத் திரு மேனியும், சூலம், பரசு, பாசம், உடுக்கு என்ற நான்கு ஆயுதங்கள் தரித்த நான்கு திருக்கரங்களும், மூன்று திருக்கண்களும் திருச்சடையும் உடைய உக்கிர வடிவம் கொண்டு விளங்கினார்.

**"பரமனை மதித்திடாப் பங்கயாசனன்**
**ஒருதலைக் கிள்ளியே ஒழித்த வானவர்**
**குருதியு மகந்தையும் கொண்டு தண்டமுன்**
**புரிதரு வடுகனை போற்றி செய்குவோம்"**

என்ற கந்தபுராணப் பாடல் வைரவர் வடிவம் தாங்கிச் சிவன் செய்த செயலை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆகம விதிமுறைகளுக்கு அமைய அமைக்கப் பட்ட வைரவர் ஆலயங்களும் கிராமிய வழிபாட்டுடன் கூடிய வைரவர் ஆலயங்களும் காணப்படுகின்றன. கிராமிய வழிபாட்டில் உண்மையான பக்தனின் பக்தி வெளிப் பாடுகளைக் காணமுடிகின்றது. பொங்கி மடை பரவி தனது வாழ்வியல் துன்பங் களையெல்லாம் அன்புரிமையுடன் இறைவனிடம் முறையிட்டு அழுதும், தொழுதும் வணங்கும் காட்சியினைக் கிராமிய வழிபாட்டில் காணலாம். கிராமிய வழிபாட்டுடன் இருந்த பல வைரவர் ஆலயங்கள் இன்று ஆகம வழிபாட்டுடன் கூடிய ஆலயங்களாக மாற்றம் பெற்று வருவதையும் காணமுடிகின்றது.

### 3. அந்நியர்களுடைய வருகையால் நமது சமயத்திற்கு ஏற்பட்ட தாக்கம்

அந்நியராகிய போர்த்துக்கேயர் இந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் சைவ ஆலயங்களை இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். சைவசமயம் சார்ந்த வழிபாடுகளையும், சைவப்பண்பாட்டையும் அடியோடு அழித்துக் கட்டக் கங்கணம் கட்டி நின்றனர். தமது மதத்தைப் பரப்புவதற்காகவும், நமது நாட்டின் பொருளாதாரத் தைச் சுரண்டுவதற்காகவும் எமது நாட்டிற்கு வருகை தந்த அந்நியர்களின் ஆட்சிக் காலத்தில் மதக்கொடுமை தலைவிரித்துத் தாண்டவமாடியது. யாழ்ப்பாணத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த போர்த்துக்கேய தளபதியான “டீ ஒலிவாரோ” என்பவன் தனது ஆளுமைக்கு உட்பட்ட பிரதேசங்களில் இருக்கின்ற சைவக் கோயில்கள் அனைத் தையும் இடித்துத் தரைமட்டமாக்கும்படி படையினருக்குக் கட்டளையிட்டான். நல்லூ ர்க் கந்தசுவாமி கோயில் உட்பட புகழ்பூத்த சைவ ஆலயங்கள் அனைத்தும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. சைவமக்கள் சிவசின்னங்கள் எதையும் அணியக்கூடா தென்று தடுக்கப்பட்டார்கள். சிவசின்னங்கள் அணிந்தவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார் கள். விரதகாலத்தில் வாழையிலையில் உணவருந்திய சைவர்கள் தாம் சாப்பிட்ட இலைகளைக் கூரைகளில் செருகி வைக்க வேண்டிய பரிதாபமான நிலையிருந்தது. இத்தனை இம்சைகளுக்கு மத்தியிலும் நமது முன்னோர் சைவ சமயத்தை மறைமுகமாக விடாது கைக் கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் என்றால் அதுவும் இறைவனது மறக்கருணையின் அருட் செயல் என்று தான் கூற வேண்டும்.

சிவபிரானுக்கும், வைரவப் பெருமானுக்கும் கையில் தரிக்கும் ஆயுதமாக அமைந்திருப்பது மூவிலைச் சூலமே ஆகும். அவர்களுடைய அதிகாரம் பெற்ற அஸ்திர தேவராக வழிபாடு செய்வதற்கும் உரியதாகச் சூலம் காணப்படுகின்றது. மத சுதந்திரம் மறுக்கப்பட்டு வாழ்ந்து வந்த யாழ்ப்பாண மக்கள் போர்த்துக்கேயருடைய ஆட்சிக் காலத்தில் வைரவ சூலத்தைக் கிணற்றடியிலும், மரங்களினடியிலும், தோட்டங்களிலும் நாட்டி வைத்து வணங்கி வந்தனர். வைரவப் பெருமானுடைய சூலமும், முருகனின் வேலுமே சைவசமயத்தையும் சைவரையும் அந்நியரிடம் இருந்து காப்பாற்றியது.

### 4. மறைமுகமாக இடம்பெற்ற வைரவர் வழிபாடு

அந்நியர்களுடைய கழுகுக் கண்பார்வையிலிருந்து தப்புவதற்காக நமது முன்னோர் கள் தமது வழிபாட்டில் சில தந்திரங்களைக் கையாண்டனர். பரம்பரையாக வழிபாடு செய்து வந்த இடங்களில் சிவபிரானுக்குரிய சின்னமாகிய மூவிலைச் சூலத்தை நட்டு, அதன் பக்கச்சுடர்களையும் துணியால் மறைத்து, வெளியே காண்பவர்கள் கிறிஸ்தவச் சிலைவழிபாடு செய்கிறார்கள் என நினைக்கும்படி செய்து சைவ வழிபாட்டை மறைமுகமாக நம்மவர்கள் கடைப்பிடித்து வந்தார்கள். இப்படியாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் சைவ கலாசாரத்தைப் பாதுகாக்கவும் எமது சைவப்பாரம்பரியம் மீண்டும் புத்துயிர் பெறவும் நாம் இன்று சைவர்களாக வாழவும் வழி வகுத்த வைரவப்பெருமானின் அருட்கடாட் சத்தை நாம் என்றுமே மறக்க முடியாது.

### 5. வைரவ விரதங்களும் வைரவ உபாசானையால் கிடைக்கும் பயன்களும்

வைரவ விரதங்கள் மங்கல வார விரதம், சித்திரை பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் என மூன்றாகும். தை மாதத்து முதற் செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஒவ்வொரு செவ்வாயும் வைரவக் கடவுளைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதம் மங்கல வார விரத மாகும். வைரவப் பெருமானை பூசிப்பதற்கு நந்தியா வர்த்தம் பூ தவிர்ந்த ஏனைய பூக்களைப் பாவிக்கலாம். இவருக்கு நிவேதனமாக வடைமாலை சாத்தும் வழக்கம் உள்ளது.

வைரவ உபாசனை வீரம், ஞானம், தைரியம் போன்ற பாக்கியங்களை அளிக்க வல்லது. நல்லியல்புகளும் தர்மமும் நலிந்து அறியாமை இருள் சூழ்ந்திருக்கும் இந் நாட்களில் மீண்டும் புத்தெழிலும் புதுவாழ்வும் பெற வைரவப் பெருமானை அனைவரும் வணங்கி உய்தி பெற முயற்சிப்பது சாலச் சிறந்ததாகும்.

வைரவப் பெருமானுக்குரிய மந்திரங்களையும் அவரைப் போற்றித் துதிக்கும் பாடல்களையும் பக்தி சிரத்தையோடு ஆசாரசீலராய் இருந்து பாராயணம் செய்வோர் மரணபயம் ஒழிவர். இக்ஷ்ட சித்திகளைப் பெறுவர். முன் செய்த பாவங்கள் அனைத் தும் ஒழிந்து தூயவராவர். அவரை நினைந்து அவருக்குரிய மந்திரங்களை ஓதி விபூதி தரிக்கின் சரீரத்தில் உள்ள நோய்கள் நீங்கிச் சுகம் பெறுவர் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

**6. கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள்**

தஞ்சாவூரில் உள்ள சைவ ஆதீன மடத்தைச் சேர்ந்த கனகசபாபதி யோகிகள் (கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள்) இலங்கையில் சைவசித்தாந்தக் கல்வியைப் பரப்பு வதில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். சைவசேனாதிபதி ஆறுமுக நாவலரின் குருவாகிய இருபாலைச் சேனாதிராஜ முதலியாருக்குச் சைவ சித்தாந்தக் கருத்துக்களை புகட்டிய பெருமை இவரையே சாரும். வடமொழி தென்மொழிகளில் மிகவும் பாண்டித்தியம் மிக்கவராகத் திகழ்ந்த இவரிடம் பலர் சைவ தத்துவ நூல்களை கற்றுத் தெளிந்தார்கள். கொச்சிக் கணேசையர், வில்வராச முதலியார், கோபாலச் செட்டியார், வண்ணை வைத்தியலிங்கச் செட்டியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். வைத்திலிங்கச் செட்டியார் வண்ணார்பண்ணையிலே ஒரு பெரிய சிவன் கோயிலை நிறுவித் தர்மபரிபாலனம் செய்வதற்கும் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளே வழி காட்டியாக இருந்தார்.

போர்த்துக்கேயருடைய ஆட்சிக் காலத்தில் நமது மொழியும் சமயமும் பண்பாடும் மிகவும் சீரழிந்த நிலையில் காணப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியின் ஆரம்ப காலத்திலும் இதே நிலை தொடர்ந்தது. இவர்களுடைய ஆட்சியின் பிற்காலத்தில் சிறிது மதசுதந்திரம் சுதேசிகளுக்கு வழாங்கப்பட்டது. இக்காலத்திலேயே கந்தபுராணப் படிப்பு நடக்கும் வேற்கோட்டமாக இயங்கிய இடத்தில் அழிவுற்ற நல்லூர் முருகன் ஆலயம் மீண்டும் கட்டப் பட்டது.

கிராமங்கள் தோறும் அழிவுற்ற சைவ ஆலயங்கள் புனரமைக்கப்பட்டன. திரு நெல்வேலி கிழக்கு ஆடியபாதம் வீதிக்கு அருகில் பொதுமக்களின் நன்மை கருதிப் பரோப காரிகளால் அமைக்கப்பட்ட கேணி இருந்தது. கேணிக்கு அருகில் கிராம மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் வைரவ சூலம் காணப்பட்டது.

சைவ சமயம் சார்ந்த நூல்கள் இலக்கண நூல்கள் எனப் பல நூல்களை எழுதிய கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் பல மாணவர்களுக்கு கல்வி புகட்டும் ஆசானாகவும் பணியாற்றி வந்தார். இவர் அரியாலைக் கிராமத்தின் வாழ்ந்து வந்த போது இறைபதம் எய்தினார். நல்லூரைச் சேர்ந்த திருநெல்வேலியில் கி.பி 1795 ஆம் ஆண்டில் இவர் சமாதி வைக்கப்பட்டார் என்பதையும் இவரைச் சமாதி வைத்த இடத் திலேயே திருநெல்வேலி கிழக்கு ஞானவைரவர் ஆலயம் அமையப்பெற்றது என்ப தையும் அறியக்கூடியதாக உள்ளது. சித்த புருக்ஷர்கள், ஞானிகளின் சமாதி கோயில் களில் இறைவனின் திருவருள் வீச்சு அதிகம் உள்ளது என்பது நமது மக்களின் நம்பிக் கையாகும். ஞானவைரவப் பெருமானை குல தெய்வமாகக் கொண்டு வழிபடும் அடியவர்கள் தமது துன்பதுயரங்களை எல்லாம் அவரிடம் முறையிட்டு தம்மை அவர் வழி நடாத்துகின்றார் என்ற நம்பிக்கையோடு தான் இன்றும் வாழ்ந்து வருகின்றார்கள்.

# எங்கட கேணியடி வைரவர் கோயில்...

**திருமதி குகேந்திரன் தமிழினி**

எங்கட கேணியடி வைரவர் கோயில்... கனகம்மா ஆச்சி சூலமாயிருந்த வைரவருக்கு பூசை செய்த எண்பதுகளின் ஆரம்பகாலம் முதல் வைரவர் கோவிலுக்கு ஓடியோடிப் போவோம்.

கனகம்மா ஆச்சி பசுமாடு வளர்த்து வைரவருக்கு பால் கொண்டு வருவா. பின்னேரம் கோயில் மணியடிக்க எங்கட அம்மம்மா, “கனகம்மாச்சி கோவிலுக்கு வந்திட்டா எங்கட வீட்டுப் பாலை வாங்கிக் கொண்டு வாங்கோ” என்று என்னையும் தம்பியையும் அனுப்புவா. காலில் செருப்பும் இல்லாமல் முள்ளு குத்த வைரவருக்கு போன நாட்கள் பசுமரத்தாணி போல் இன்றும் நெஞ்சில் பதிந்துள்ளன.

நவராத்திரி என்றால் ஒன்பது நாளும் பின்னேரம் பூசைக்கு சென்று அவல், சுண்டல், வடை கையில் வாங்கி சாப்பிட்ட நினைவுகள் நெஞ்சம் நிறைந்தவை.. சேமக்கலம் அடிக்கக் கூட நான், நீ என்று போட்டி போட்ட நாட்கள் சிரிக்க வைக்கும் ஞாபகங்கள்....

முன்பு வைரவரின் மர உண்டியல் றோட்டுக் கரையில் ஒரு சற்சதுர மாடத்தில் இருக்கும். வீட்டில் யாருக்கும் காய்ச்சல் என்றால் அல்லது வீட்டில் யாரேனும் பயணம் வெளிக் கிட்டால் அம்மா நேர்த்தி வைத்து உண்டியலில் காசு போட வைப்பா..... எங்களது சிறு சிறு வேண்டுதல்களையும் வைரவர் கவனமாக கேட்பார்.

பின்னால இருந்த கேணி மூட முதல் அந்தப் பக்கம் பற்றையாக இருக்கும். அங்கே முனிவர் தவம் செய்கிறார் என்பார்கள். பின்பு தான் தெரிய வந்தது. அது முனிவர் சிலை என்பது. முனிவர் சிலையின் முடியில் இருந்த பச்சை மரகதக் கல்லை யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். பிறகு ஆக்கள் குப்பை போடுகினம் என்று ஊற்றை தவிர மிச்சக் கேணியை மூடி விட்டார்கள். கோயிலை புனருத்தாரணம் செய்து கருங்கல் சிலையும் வைத்தார்கள்.

தம்பிஐயா பாட்டாவின் காலத்தவர்களின் ஊக்குவிப்பில் வைரவர் கோவிலடியில் பேச்சுப் போட்டி, ஓட்டப் போட்டி போன்றவற்றிலும் பங்கெடுத்தோம், நாடகங்களும் நடித்து மகிழ்ந்தோம். கேணியடி சனசமூக நிலையம் இருந்த காலத்தில் சினிமாப் படம் காட்டி பத்திரிகை வாங்கிப் போட பணம் சேகரிப்பார்கள்.

இப்போ கோயில் எவ்வளவோ முன்னேறிட்டுது. எண்ணெய்க்காப்பு, கும்பாபிஷேக ஆயத்தம் நேரலையாக பேஸ்புக்கில் பார்க்கும் நிலைக்கு வைரவர் எங்களை முன்னேற்றி இருக்கிறார். மேலும் பல முன்னேற்றங்கள் நிகழ மக்கள் மனங்களையும், வாழ்வையும் வைரவர் வளப்படுத்த வேணும் என்று வேண்டி நிறைவு செய்கிறேன்.

# திருநெல்வேலி ஸ்ரீ ஞானவைரவர்சுவாமி திருவூஞ்சற் பதிகம்

**காப்பு**

பேரூராம் திருவையம் பதியினிலேச்
சைவநெறியும் செம்பொருளும் சிறப்புடன் திகழும்
பேராளர் கருமநலங் காக்கும் ஞானக்
கடவுளராம் வைரவர்மேல் ஊஞ்சல் பாடப்
பாராலே வருவிக்கினம் பகைகள் போக்கும்
பஞ்சகர விநாயகர் பாதம் போற்றி
வாராது வந்திட்ட மாமணியே போற்றி
பெற்றகருணை யும்பயனும் போற்றி போற்றி

**ஊஞ்சல்**

திருவளரும் ஆரணநூல் கால்களாகத்
தினந்தருநல் லாகமங்கள் விட்டமாகக்
கருவளரும் பிரணவமே புரியதாகக்
கதியருளும் திருமுறைகள் தவிசேயாக
உருவமைந்த திருவூஞ்சல் உவந்துவைகி
உலகுயிர்க்கும் உறுபயன்கள் ஆக்கும் வண்ணம்
அருங்கேணிப் பதியதனில் கோவில் கொண்டு
வைகியருளும் வைரவரே ஆடீர் ஊஞ்சல்
(1)

சிவன்சக்தி கணபதியுஞ் வேளும் வாழ்த்தச்
செயவீர பத்திரருஞ் சேர்ந்து வாழ்த்தத்
தவதேவர் குலமுனிவர் கணங்கள் வாழ்த்தத்
தலமெட்டுத் திசையானை தாமும் வாழ்த்தப்
பவவினைகள் பரிகரித்தும் பராமரித்தும்
பாகங் கொள் சாமுண்டி மகிழும் வண்ணம்
நவகேணிப் பதியதனில் கோயில் கொண்டு
நயந்தருளும் வைரவரே ஆடீர் ஊஞ்சல்
(2)

சந்திரனுஞ் சூரியரும் குடைகள் தாங்கத்
தக்கநல் வருணனா லவட்டமேற்ற
சத்தமிகு வாயுதேவன் கவரியாட்ட
சாத்திர தோத்திரங்கள் ஓதுவாரோத
சிந்துதேன் பொழில்சூழ் நெல்வேலிவாழும்
நல்லவரும் வல்லவரும் பணிந்து நிற்க
சித்தத்துறை கேணிப்பதியில் கோயில்
கொண்டருளும் வைரவரே ஆடீர்ஊஞ்சல்
(3)

திருமுடியில் இளம்பிறைபோல் நுதலின்மேலே
திருநீற்றுத் தனிப்பொட்டுத் தங்கியாட
திருக்காதின் குழைச்சங்க வளையின் மேலே
செவ்வரத்த மலர்செறிந்த தோடுமாடத்
திருக்கழுத்தில் வெண்பளிங்கின் வடம் ஆர்த்தாடத்
திருவையம்பதி திகழ் கேணித்தலத்தினில்
கோயில் கொண்ட வைரவரே யாடீரூஞ்சல்

(4)

நாரதரும் கின்னரரும் யாழ்மீட் டிசைப்பக்
கிம்புருடர் அரம்பையர்கள் கீதம்பாடக்
பாவலரு மேனகையர் நடனம் ஆட
நாதமுழ வார் தாளம் நன்றே யொலிப்ப
நன்னரிய தோத்திர வருட்பாக் கொண்டே
நல்லபயன் பெற்றவ ரினிதே ஓத
நற்கேணிப் பதியதனில் ஆதிமுதற் கோயில்
கொண்டருளும் வைரவரே ஆடீர் ஊஞ்சல்

(5)

ஈடதிக திருத்தொண்டர் ஏவல் செய்ய
எண்ணதிக வானவர் பூ மாரி பெய்ய
கோடுடைய திருநந்தி தூபம் காட்டக்
குணவிடையோன் சந்தனசெந் திலகமிட
ஏடதிக மலர்தாபன் வாழ்த்திப்பாட
எழுசக்தி கோடியெல்லாம் மாலை போட
ஏறலுறு நெல்வேலியுழு கொடையின் மேலும்
ஆதித்தெய்வம் வைரவரே ஆடீரூஞ்சல்

(6)

செருக்கயனை அழித்தருளிச் செம்மாப் புற்றுச்
சேரிடத்தாந் திருக்கையிலே கபால மேந்தி
பெருந் தொண்டாற் சிறுத் தொண்டர்க்கருணை யூட்டிப்
பேரன்பின் மெய்த்தன்மை பெரிதும்காட்டி
அருகணையும் மும்மலங்கள் அடக்கி ஆற்றி
அக்குறியே திரிசூலம் ஆகக்கொண்டு
திருநெல்வேலி கேணியடியில் அருள்வளர் கோயில்
கொண்டருள் புரியும் வைரவரே ஆடீரூஞ்சல்

(7)

நெல்லும் சிறுபயிரும் ஏனைத்தானியமும்
சிறப்புடனே விளைந்து வளம் பெருகி
நல்லூராம் திருநெல்வேலிப் பதியினில்
கற்றவர், நல்லவர் நிறைந்திட்ட பதியிதுவே
ஒல்லாந்தர் காலத்து முற்கேணியில் உறை
வைரவா நம்மவர் யாவரும் நலமுடனே

பல்லின்பம் பெற்று சிறப்புடனே வாழ்ந்திட
அருள்புரியும் இறையே வைரவா ஆடீரூஞ்சல்

(8)

வலத் திருக்கைத் தமருகத்தின் வளர் ஒலி தழைப்ப
மருள்இரிக்குத் திரிசூலம் மின்னொளி எறிப்பத்
தலமெங்குந் திருவடி மேல் தருசிலம் பொலிக்கத்
தண்ணனிசேர் திருமுகத்தில் முறுவல் பூப்ப,
சலனமிலா வாழ்வுமதன் சால்பும் பயனும்
சார்புனராம் யாவர்க்குத் தாமே வழங்க
நலங்கள் நிறை கேணியடினில் நன்றே
வீற்றிருந்து அருளுமிறையே வைரவா ஆடீரூஞ்சல்

(9)

நம்மாசுக்கள் நலிந்துவிட ஆடீர் ஊஞ்சல்
நலங்களெலாம் நண்ணிட ஆடீரூஞ்சல்
வெம்பகை வேர்பெயர நன்றாடீர் ஆடீரூஞ்சல்
ஒன்றுபட்டு  வாழ்ந்திடவே ஆடீரூஞ்சல்
விம்மிதத்தின் வினை கொள்ள ஆடீரூஞ்சல்
வீண்கருமம் விட்டகல ஆடீரூஞ்சல்
நம்பியரும் நங்கையரும் நன்றேவரைங்கிட
அருள் ஞான வைரவரே ஆடீர் ஊஞ்சல்

(10)

**வாழி**

கார்வாழ்க் பார்வாழ்க் நற்கதிரும் வாழ்க
பாரெலாம் வளம் பெருக கருணை வாழ்க
சீர் வாழ்க் நல்லடியார் நன்றே வாழ்க
சைவநெறி பாரெங்கும் சிறந்து வாழ்க
பேர் வாழ்க் நாற்பொருளின் பயன் வாழ்க
பெம்மானெம் வைரவர் மாதிரியும் வாழ்க
பேரூராம் திருநெல்வேலி கேணியடிப்பதி
யுறை ஞான வைரவர் தாள்பணிவார் வாழ்க

**சுபம்.**

**எச்சரீக்கை**

மூவா முதலே ஞானவைரவா! எச்சரீக்கை
மூவேழுலகெங்குந் தொழுமுதலே எச்சரீக்கை!
பாவாயதன் பயனாயுறு பண்பே எச்சரீக்கை!
பாதந்தொழுமடியார்க்கருள் பரனே எச்சரீக்கை!
காவாயெனத் தாள்ப்பவர்களுக்கருள்வாய்! எச்சரீக்கை!
அயன்தலை கிள்ளி நின்றவனே! எச்சரீக்கை!
நாவாரநின் றேத்தும்மலர் நம்பா! எச்சரீக்கை!
நற்கருணைபுரி யுமிறையே அருளே! எச்சரீக்கை!

**பராக்கு**

சீர்மிகு கேணிப்பதி யுறை செல்வா! பராக்கு!
செய்யதிருச் சூலாயுதகாரா! பராக்கு!
பேர்தங்கு மனோகரப் பெருமா! பராக்கு!
சொற்கடந்த பெருஞ் சோதியே! பராக்கு!
ஞானவருள் அடியவர்க் கருள்வோனே! பராக்கு!
யாவரையும் அரவணைக்கும் நற்பதியே! பராக்கு!
வானவரும் தாழ்ந்து நிற்கும் மெய்ப்பொருளே! பராக்கு!
கதிவழி காட்டுகின்ற ஞானவைரவா! பராக்கு!

**லாலி**

பேரன்பருளும் விநாயகர்க்கு லாலி, சுப லாலி
சேவற்கொடியுடையார்க்கும் லாலி, சுப லாலி
பேரின்பமருளும் பார்வதிக்கும் லாலி, சுப லாலி
ஆடவல்லார் சிவனார்க்கும் லாலி, சுப லாலி
சூலங்கொள் வைரவர்க்கு லாலி, சுப லாலி
சூழுலகார் மாலனுக்கும் சுந்தரியார் சாமுண்டிக்கும் லாலி, சுப லாலி
லாலி, சுப லாலி
அடியவர் யாவர்க்கும் லாலி, சுப லாலி

**மங்களம்**

மங்களம் சுப மங்களம்
மங்களம் சுப மங்களம்

உமையம்மை பாகர்க்கு மங்களம் – நற்
சித்தாந்தத் திகழ் ஞானவைரவரே மங்களம்
தலை மாலை உடையவர்க்கு மங்களம் அவர்
பெருஞ்சக்தி சாமுண்டி அருநிதியே மங்களம்

மங்களம் சுப மங்களம்
மங்களம் சுப மங்களம்

பேரன்பின் உறைவிடமே மங்களம் – எமை
வளமாக்கி வாழவைக்கும் வைரவரே மங்களம்
பேரின்ப மருளுகின்ற பரம்பொருளே மங்களம்
எமையாளும் வடுகனே சூலாயுதனே மங்களம்

மங்களம் சுப மங்களம்
மங்களம் சுப மங்களம்

**பயன்**

சீரார் திருவையில் வாழ் பெருமான் வைரவர்
பேரார் திருவடியை தொழுதெழுவோர் – பாரார்
புகழ வாழ்வார்: அருளின்ப வன்பினைப் பெற்றே
திகழ்வர்: தக்கதவம் பெற்று.

# கேணியடி ஞான வைரவர் ஆலய பரிபாலன சபை

## நிர்வாகசபை விபரம்

| | | |
|---|---|---|
| தலைவர் | : திரு. ஐ.சுகுமார் | |
| உபதலைவர் | : திரு.ச.சிதம்பரநாதன் | |
| செயலாளர் | : திரு. ச.துவாரகன் | |
| உபசெயலாளர் | : திரு. ம.தஜீவன் | |
| பொருளாளர் | : திரு. இ.சஞ்சீபன் | |
| உறுப்பினர்கள் | : திரு. த.சுரேந்திரன் | திருமதி. சு.லலிதாதேவி |
| | : திரு. ச.ரவிகரன் | திரு. கி. சயந்தன் |
| | : திரு. ச.ரவிசங்கர் | திரு. ந.சிவரஞ்சன் |
| | : திருமதி. த.மஞ்சுளா | திருமதி. த.பரிமளாதேவி |
| | : திருமதி. சி.ஜெயந்தி | திரு. சிவானந்தரசா |
| கணக்காய்வாளர் | : திரு. தி.செல்வமனோகரன் | |

### கேணியடி ஞான வைரவர் ஆலய பரிபாலன சபை - கணக்கறிக்கை (சுருக்கம்)

| ஆரம்ப காசு மீதி – 22.10.2017 | 132,624.00 | மொத்த செலவுகள் (22.10.2016 – 14.05.2017) | 2,296,171.00 |
|---|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கியின் நிலையான வைப்பிலிருந்து மாற்றப்பட்ட பணம் | 606,749.71 | வங்கி அறவீடுகள் | 255.03 |
| மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கிலிருந்து மாற்றப்பட்ட பணம் | 400,000.00 | வங்கி மீதி | **1,61,320.32** |
| புதிய சேமிப்புக் கணக்கில் வைப்பிற்கு கிடைத்த வட்டி – 30.04.2015 வரை | 22,201.64 | | |
| மொத்தமாக சேகரிக்கப்பட்ட நிதி (22.10.2016 –14.05.2017) | 2,368,184.00 | காசு மீதி | **72,013.00** |
| | **3,529,759.35** | | **3,529,759.35** |
| காசு மீதி – 14.05.2017 | 72,013.00 | ஒதுக்கீடு – மண்டலாபிசேக பூசகர் செலவுகள் | 70,000.00 |
| வசூலிக்கப்படவேண்டிய மண்ட லாபிசேக பூசைக்கான கட்டணம் | 88,000.00 | ஒதுக்கீடு – மங்கள வாத்தியம் | 45,000.00 |
| | | ஒதுக்கீடு – கும்பாபிஷேக மலர் | 30,000.00 |

### கும்பாபிஷேக நிகழ்வுகளிற்கான அடியார்களின் நிதி மற்றும் பொருள் பங்களிப்பு விபரம்:

| விபரம் | Rec. No. | தொகை | விபரம் | Rec. No. | தொகை |
|---|---|---|---|---|---|
| S. சிதம்பரநாதன் | 1 | 5,001.00 | T. யோகேஸ்வரி | 73 | 25,000.00 |
| S.பாலகுமார் | 2 | 50,000.00 | அமரர் வ. இராசையா குடும்பம் | 74 | 100,000.00 |
| உண்டியல் நிதி | 3 | 27,800.00 | இ.இராஜேஸ்வரன் | 75 | 1,000.00 |
| சிறிராம் ரேடர்ஸ் | 4 | 5,000.00 | இ.கவிதா | 76 | 1,000.00 |
| த.சுரேந்திரன் | 5 | 50,000.00 | T.சிவதர்சினி | 77 | 1,000.00 |
| ப.மகேஸ்வரி | 6 | 1,000.00 | செ.செந்தில்குமரன் | 78 | 5,000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| S.ஜெகத்சன் | 7 | | சிவசுப்பிரமணியம் குடும்பம் | 79 | 5,000.00 |
| க.சிற்பாலன் | 8 | 1,000.00 | இ.இராஜேஸ்வரன் | 80 | |
| இ.சிவானந்தராசா | 9 | 2,000.00 | அமரர் வ.இராசையாகுடும்பம் | 81 | 50,000.00 |
| அன்ரன் டிக்சன் | 10 | 1,000.00 | அமரர் மகாதேவன் குடும்பம் | 82 | 30,000.00 |
| அன்ரன் | 11 | 500.00 | சிறிராம் ரேடர்ஸ் | 83 | 5,000.00 |
| சுகுமார் வக்சலா | 12 | 16,360.00 | அமரர் மகாதேவன் குடும்பம் | 84 | 30,000.00 |
| செ.பிரதீபன் | 13 | 1,000.00 | சோ.சண்முகநாதன் | 85 | 3,000.00 |
| கங்கா சங்கர் சிவசக்தி | 14 | 500.00 | சோ.பாக்கியம் | 86 | 1,000.00 |
| ஐ.சுகுமார் | 15 | 100,000.00 | கஜீபன் | 87 | 5,000.00 |
| ஐ.மோகனதாஸ் | 16 | 50,000.00 | சிறீவிசாகராசா | 88 | 20,000.00 |
| ஐ.நந்தினி | 17 | 50,000.00 | சீவரத்தினம் | 89 | 5,000.00 |
| பா.கிரியாதேவி | 18 | 20,000.00 | ஜெயராம் | 90 | 35,808.00 |
| க.சுந்தரலிங்கம் | 19 | 5,000.00 | Corel tasty | 91 | 5,000.00 |
| வலன்ரைன் | 20 | 1,000.00 | சச்சிதானந்தம் மனோகரன் | 92 | 50,000.00 |
| பொன் சுந்தரலிங்கம் | 21 | 50,000.00 | அமரர் வ. இராசையாகுடும்பம் | 93 | 50,000.00 |
| இ.திருச்செல்வம் | 22 | 5,000.00 | S. பாலகுமார் | 94 | 50,000.00 |
| S.சிறிதரன் | 23 | 5,000.00 | சிறிராம் ரேடர்ஸ் | 95 | 5,000.00 |
| S.நடராஜா | 24 | 50,000.00 | ஐ. கனகலிங்கம | 96 | 10,000.00 |
| ஐ.துரைரட்ணம் | 25 | 1,000.00 | க. கணேசானந்தம் | 97 | 3,000.00 |
| தி.பவளராணி, தி.லவன் | 26 | 10,000.00 | மகேஸ்வரன் | 98 | 2,500.00 |
| இ.திருசெல்வம் | 27 | 5,000.00 | சிறிராம் ரேடர்ஸ் | 99 | 100,000.00 |
| சு.இராசலிங்கம் | 28 | 25,000.00 | சிறீவிசாகராசா | 100 | 10,000.00 |
| விஜயரட்ணம் இராஜேஸ்வரி மயூரன் | 29 | 126,225.00 | அமரர் வ. இராசையா குடும்பம் | 101 | 36,000.00 |
| மகாலிங்கம் சரோஜினிதேவி | 30 | 11,475.00 | சந்திரமோகன் | 102 | 11,000.00 |
| வசிகரன் சுமங்கலா | 31 | 11,475.00 | தி. கரன் | 103 | 11,000.00 |
| துசிதரன் மலர்விழி | 32 | 22,950.00 | S. சிறீதரன் | 104 | 1,000.00 |
| கு.கோபிலன் | 33 | 80,000.00 | க. கிரிதரன் | 105 | 2,000.00 |
| தவக்குமார் மஞ்சுளா | 34 | 50,000.00 | T. அருள்ராஜ் | 106 | 10,000.00 |
| சிவலோகநாயகி | 35 | 3,090.00 | T. சுரேன் | 107 | 11,000.00 |
| ம.தஜீவன் | 36 | 15,000.00 | ந. சிவரஞ்சன் | 108 | 11,000.00 |
| ந.கிருபாகரன் | 37 | 5,000.00 | வ. அழகுதுரை | 109 | 5,000.00 |
| சோ.துரைசிங்கம் | 38 | 10,000.00 | | 110 | |
| த. சிவக்கொழுந்து | 39 | 25,000.00 | கி. நாகபூசனி | 111 | 1,000.00 |
| R. சிவசுப்பிரமணியம் | 40 | 15,000.00 | கி. நாகபூசனி | 112 | 4,000.00 |
| அமரர் சோ. வேலாயுதபிள்ளை | 41 | 10,000.00 | த. தம்பித்துரை | 113 | 1,000.00 |
| சி.சயந்தன் | 42 | 2,000.00 | ரவீந்திரலால் | 114 | 11,000.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிறிராம் ரேடர்ஸ் | 43 | 5,000.00 | சிவனேஸ்வரி | 115 | 1,000.00 |
| மகேஸ்வரன் | 44 | 2,000.00 | ரமேஸ் | 116 | 1,000.00 |
| ந.கணேசமூர்த்தி | 45 | 15,000.00 | | 117 | |
| ம.தஜீவன் | 46 | 10,000.00 | கு. செந்தூரன் | 118 | 1,000.00 |
| அரசரட்ணம் | 47 | 2,000.00 | சிவசுப்பிரமணியம் | 119 | 1,000.00 |
| ஆறுமுகம் | 48 | 5,000.00 | பிரியதர்சினி | 120 | 1,000.00 |
| அடியார் | 49 | 1,000.00 | சுரேஸ் | 121 | 500.00 |
| S.முகுந்தன் | 50 | 15,000.00 | ப. நளாயினி | 122 | 3,000.00 |
| கிரிதரன் | 51 | 10,000.00 | வி. சாரங்கன் | 123 | 1,000.00 |
| இ.திருச்செல்வம் | 52 | 1,000.00 | மகேந்திரன் | 124 | 1,000.00 |
| இரவீந்திரலால் | 53 | 20,000.00 | S. சத்தியேந்திரன் | 125 | 1,000.00 |
| த.குகதாசன் | 54 | 10,000.00 | சிவகுமார் | 126 | 1,000.00 |
| சிறிராம் ரேடர்ஸ் | 55 | 5,000.00 | கனகநாதன் | 127 | 1,000.00 |
| K.கேதீசன் | 56 | 5,000.00 | ஜெயரூபன் | 128 | 1,000.00 |
| த.யோகேஸ்வரி | 57 | 2,000.00 | S. சிதம்பரநாதன் | 129 | 11,000.00 |
| K.கேமா | 58 | 2,000.00 | S. சிதம்பரநாதன் | 130 | 1,000.00 |
| ஐ.பாலச்சந்திரன் | 59 | 100,000.00 | N. ஜெயரட்ணராஜா | 131 | 5,000.00 |
| நகுலா | 60 | 5,000.00 | வ. கேதீஸ் ஐயா | 132 | 25,000.00 |
| சோ.மோகனதாஸ் | 61 | 200,000.00 | வசந்தராஜ் | 133 | 5,000.00 |
| ஐ.பாலகுமார் | 62 | 50,000.00 | ஐ. கிருபாகரன் | 134 | |
| வசந்தநாயகி சச்சிதானந்தம் | 63 | 12,000.00 | தில்லைநாயகி | 135 | 1,000.00 |
| ஐ.கிருபாகரன் | 64 | 115,000.00 | அழகுதுரை | 136 | 1,000.00 |
| சிவயோகேஸ்வரி தியாகராசா | 65 | 22,000.00 | பரந்தாமன் | 137 | 1,000.00 |
| K.திருச்செல்வம் | 66 | 5,000.00 | மேதுசன் | 138 | 1,000.00 |
| N. அருளானந்தம் | 67 | 5,000.00 | ராஜீ குடும்பம் | 139 | 1,000.00 |
| சி. லலிதாதேவி | 68 | 5,000.00 | காயத்திரி | 140 | 1,000.00 |
| சுதன் | 69 | | ந. கிருபாகரன் | 141 | 1,000.00 |
| சிறிராம் ரேடர்ஸ் | 70 | 5,000.00 | றஞ்சனாதேவி | 142 | 1,000.00 |
| தாட்சாயணி குகன் | 71 | 10,000.00 | கேதீஸ்வரன் | 143 | 1,000.00 |

1. அ. பிரகாஸ் – கும்பாபிசேகத்திற்கான இலவச ஒளி மற்றும் ஒலியமைப்பு
2. US Guest House – குருக்கள்மாருக்கான இலவச தங்குமிட வசதி
3. தி. லவன் – வயறிங் வேலைக்குரிய முழுச் செலவும்
4. S.ஜெகத்சன் – 10 கூரைத்தகடுகள்
5. இ. இராஜேஸ்வரன் – 3 லோட் சல்லி மற்றும் 5 லோட் டஸ்ற்
6. சுதன் – சீமெந்து 1 பை
7. T. சுரேன் – திருவாசிகள், திரைச்சீலைகள் மற்றும் குடை
8. ஐ. கிருபாகரன் – Forcus lamp

# நன்றியுரை

எங்கள் கேணியடி வைரவப் பெருமானின் மேலான நல்லாசியுடனும், எமது அடியார் பெருமக்களின் அரும் பங்களிப்புடனும், எமது ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் அனைவரின தும் ஒன்றிணைந்த கூட்டு முயற்சியினாலும் இந்த ஆலயத்தின் புனராவர்த்தன வேலைகளைச் சிறப்பாக நிறைவேற்றி, கும்பாபிஷேக நிகழ்வுகளையும் மிகச் சிறப்புற நடாத்தி மகிழ்ந்துள்ளோம்.

ஆரம்ப கால வைரவர் சூல வழிபாடு முதல் பல்வேறு முறைகளில் இந்த ஆலயம் சிறப்புற வழிசமைத் துக் கொடுத்த எமது முன்னவர்கள் அனைவரிற்கும் எமது முதற்கண் நன்றிகள். கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2016 வரை இந்த ஆலய பரிபாலன சபைத் தலைவராக இருந்து சிறப்பாகப் பணியாற்றி, பழைய ஆலய வங்கிக் கணக்கு விபரங்களையெல்லாம் பாதுகாத்து புதிய நிர்வாக சபைக்குக் கையளித்த ஆறுமுகம் ஐயா அவர்களிற்கு எமது சிறப்பான நன்றிகள்.

இந்த மிகக் குறுகிய காலப்பகுதியில் (22.10.2016 - 14.05.2017) ஆலய புனராவர்த்தன வேலை களுக்கும் கும்பாபிஷேக நிகழ்வுகளுக்குமாக மொத்தமாக ரூபா. 2,368,184.00 தொகையைத் திரட்டுவதற் குத் துணைபுரிந்த வைரவப்பெருமானின் அன்பு அடியார்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். ஆகம விதிமுறைகளுக்கு அமைய புனராவர்த்தன சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேக நிகழ்வுகளை முன்னின்று நடாத்திய அனைத்து சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் கோடி நன்றிகள்.

ஆலயத்திற்கான கட்டிட, கூரை மற்றும் இரும்பு வேலைகளை செவ்வனே உரிய நேரத்தில் செய்து தந்த அனைத்துக் கலைஞர்களுக்கும், கலைநயமான சிற்பவேலைகளை சிறப்புறச் செய்துதவிய நவாலியூர் சந்திரன் அவர்களுக்கும், வர்ணக்கலவைகளினால் ஆலயத்தை வனப்புற மாற்றி வைத்த திருநெல்வேலி ரவி ஆர்ட்ஸ் அவர்களுக்கும் என்றென்றும் நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆலய நிகழ்வுகளிற்கான நாதஸ்வர-மேள மங்கல வாத்தியங்களை சிறப்பாக வழங்கிவரும் நல்லூர் சிவசுப்பிரமணியம் குழுவினருக்கும் ஒளி மற்றும் ஒலி அமைப்பினை எமது வேண்டுகோளுக்கிணங்க இலவச மாக வழங்கியதோடு தானாகவே முன் வந்து மகா கும்பாபிஷேக தினத்தன்று விசேட மங்கல வாத்தியக் கலை ஞர்களையும் இணைத்து இரண்டாவது மகா கும்பாபிஷேகத்தை நினைவு கூரவைத்த திரு.அ.பிரகாஸ் அவர் களிற்கும் எமது நன்றிகள்.

ஆலயத்தினுடைய மாதாந்த பூசகருக்குரிய செலவினை கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக வழங்கி எமது மாதாந்த நிர்வாகச் சுமையினைக் குறைத்ததோடு அவ்வப்போது ஆலயத்தின் தேவைகளுக்கு எல்லாம் முன்வந்து உதவுகின்ற சிறீராம் ரேடர்ஸ் இற்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

கூழங்கைத் தம்பிரான் அவர்களின் சமாதி இந்த ஆலயத்தினருகே அமைந்துள்ளது என்பதை முதன் முதலாக ஆதாரங்களுடன் தமது சொற்பொழிவுகளில் தெரிவித்துப் பின்பு அதனை இந்த கும்பாபிஷேக மலரிற்கான ஆக்கமாகவும் எழுதித்தந்த பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா அவர்களிற்கும் குறுகிய கால வேண்டுதலிலேயே வைரவர் வழிபாடு தொடர்பான விரிவான கட்டுரையைத் இந்த இதழிற்காகத் தந்துதவிய சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் அவர்களிற்கும் எமது கோடானு கோடி நன்றிகள் உரித்தாகட்டும். இந்த கும்பாபிஷேக மலரிற்காக ஆரம்பகால “ட” வடிவக் கேணியின் மாதிரி வரைபடத்தை வரைந்துதவிய எம்.எஸ் சிவதாசன் ஆசிரியர் அவர்களுக்கும், இம்மலரினை தொகுத்து வழங்கிய மற்றும் இதழின் எழுத்துரு மற்றும் வடிவமைப்பு வேலைகள், அச்சக வேலைகளைக் கையாண்ட திரு. செ. கிரிசாந் மற்றும் வி.ஜெனனி அவர்களுக்கும் சிறப்பான நன்றிகள்.

கும்பாபிஷேகம் தொடர்பான அனைத்து ஒழுங்கமைப்புகளிலும் எமக்கு வழிகாட்டி, ஊக்கமும் உத்வேகமும் அளித்ததோடு தனது வேலைப்பளுக்களையும் பொருட்படுத்தாது கால நேரம் பாராது எம்மோடு ஒரு குருவாக, நல்ல நண்பனாக, நிர்வாகசபைத் தொண்டனாக சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய எமது ஆலய சிவாச்சாரியர் சிவஸ்ரீ.வரத கேதீஸ்வரக்குருக்கள் ஐயாவிற்கு இவ் ஆலய அடியார்கள் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



கேணியடி வைரவப் பெருமானின் அருளாசிகள் என்றென்றும் எங்கள் அடியார்கள்
அனைவருக்கும் இடையறாது கிடைக்க வேண்டும் என்று மனமார வேண்டி நிற்கின்றோம்.

நன்றி.




# பரிவார மூர்த்திகள்



பிள்ளையார்



முருகன்






மூலவர் விக்கிரகம்



எழுந்தருளி வைரவர்



ஆரம்ப கால வழிபாட்டில்
பயன்படுத்தப்பட்ட வைரவ சூலம்



ஆரம்ப கால 'ட' வடிவக் கேணி
(மாதிரி வரைபடம்)



செப்பு சூல வழிபாடு



கேணிக்கட்டுடன் அமைந்திருந்த
புராதன சிலை



சிலையின் கையிலுள்ள
சின்முத்திரை



1963 – 1987 வரையிலான
ஆலயத் தோற்றம்



1987 – 2016 வரையிலான
ஆலயத் தோற்றம்



கும்பாபிஷேக பெருவிழா
2017




தற்போதைய ஆலயத்
தோற்றம்





எழுந்தருளி வைரவர்

# மகா கும்பாபிஷேக நிகழ்வுகள் – 2017



கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருவான்..
கும்பிட்ட கைகளுக்குக் காவல் தருவான்..
நம்பித் தொழுவோருக்கு நலங்கள் சேர்ப்பான்..
நானிலத்தோர்க்கெலாம் அருள்சொரியும் ஊற்றாய் நிற்பான்..




"கேணியடி வைரவர் தாள் பணிந்தோர்க்கெலாம்
ஏணியாம் வாழ்விற் சிறப்பு"